

நாமக்கல் மாவட்டம் எலச்சிபாளையம், பொம்மம்பட்டி, அகரம், ஏளூர், கொக்கராயன்பேட்டை உள்ளிட்ட ஊராட்சிகளில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, 168 பயனாளிகளுக்கு ரூ.1.44 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ.பிரகாஷ், வி.எஸ்.மாதேஸ்வரன், பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. மற்றும் ஒன்றியக் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் அரசு துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கழக முன்னோடி

# மாயூரம் காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 6 –

கழக முன்னோடி – முனைவர் – காந்தி கருணாநிதி அவர்கள், நேற்று முன்தினம் (4.3.2025–செவ்வாய்க்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது மறைவுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னைய்யா அவர்களின் பேரன் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இளமைக் காலத்தில், அவரது உற்ற நண்பர்களில் ஒருவராக விளங்கிய மாயூரம் இ.காந்தி அவர்களின் புதல்வர்– கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்ட முனைவர் காந்தி கருணாநிதி அவர்கள், உடல்நலக்குறைவால், நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

‘ஆவின்’ நிறுவனத்தில் அதிகாரியாக அவர் பணியாற்றி வந்தபோதும், கழக நிகழ்ச்சிகளிலும் – தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டங்களிலும் , நான் பங்கேற்கும் நிகழ்கவுளிலும் தவறாமல் காந்தி கருணாநிதி தென்படுவார் எனக் கூறிடும் அளவுக்கு, கழகக் கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டவராக விளங்கியவர் அவர். பணி ஓய்வுக்குப் பிறகு முன்னினும் தீவிரமாக கழகப் பணியாற்றி வந்தார்.

தமது தந்தை வழியில், கழகத்தில் பெரும் பற்றும், பிடிப்பும், ஈடுபாடும் கொண்டு கழகப் பணியாற்றி வந்த முனைவர் காந்தி கருணாநிதி அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் பெயரில், முதல்வரின் 72வது பிந்த நாளை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் கிழக்கு மாநகர திருவெறும்பூர் பகுதி கழக வார்டு எண் 39, 39 அ கழகங்களின் சார்பாக அரசாயி அம்மன் கோயில் திடல் எல்லக்குடி பகுதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பகுதி கழகச் செயலாளர் s சிவக்குமார் வரவேற்புரை தலைமை 39வட்டக் கழகச் செயலாளர் எஸ்.செல்வராஜ் 39 அ வட்டக் கழகச் செயலாளர் வினோத் கனகராஜ். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்கள் கிழக்கு மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன் தலைமைக் கழகப் பேச்சாளர் சாவல் பூண்டி மா.சுந்தரேசன், இளம் தலைமைக் கழக பேச்சாளர் பாலக்கரை விஜயலட்சுமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நன்றியுரை மாவட்டத் துணைச் செயலாளர் அ.த.த.செங்குட்டுவன் நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் , மாவட்ட, மாநகர, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் கூட்டத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

### ஆட்சியர் ச.உமா தலைமை, எம்.பி.க்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார்,, கே.இ.பிரகாஷ், வி.எஸ்.மாதேஸ்வரன், பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ, கே.எஸ்.மூர்த்தி முன்னிலை

# நாமக்கல் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.1.44 கோடி மதிப்பில் 168 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

நாமக்கல், மார்ச் 6 -

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பொம்மம்பட்டி, அகரம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஏளூர், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், கொக்கராயன் பேட்டை உள்ளிட்ட ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈரோடு கே.இ. பிரகாஷ், நாமக்கல் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதி வேந்தன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, 168 பயனாளிகளுக்கு ரூ.1.44 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க .ஸ்டாலின் அவர்கள் பழங்குடியின ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்திடும் வகையிலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் எளிதாக கிடைக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையிலும், அவர்களின் பயண நேரத்தை குறைக்கும் வகையில் “மக்களுடன் முதல்வர்” என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். தற்போது ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் அதிக அளவில் வசிக்கும் கிராம ஊராட்சிகளில் ”மக்களுடன் முதல்வர்” முகாம் 3ம் கட்டமாக நடத்த உத்தரவிடப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில் 60 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு “மக்களுடன் முதல்வர்” திட்டம் மூன்றாம் கட்டமாக நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் அரசுத் துறைகளை தேடி வந்து மனுக் களை அளித்த நிலையை மாற்றி அரசுத் துறை அலுவலர்கள் பொது மக்களை நேரடியாக சந்தித்து அவர்களது கிராமங்களுக்கே சென்று மனுக்களை பெற்று தீர்வு வழங்கி வருகின்றார்கள். இதன் மூலம் மக்களின் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. “தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி உழைக்கும் மக்களுக்கான உன்னதமான ஆட்சி, தூய்மைப் பணியாளர்களுக்கான தூய்மையான ஆட்சி. ஏழை, எளிய மக்களுக்கான எளிமையான ஆட்சி. இது உங்களுக்கான ஆட்சி. நாங்கள் எப்போதும் உங்களுக்காக உழை ப்போம் என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

இம்முகாம்களில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.தங்கவேல், வட்டூர் ஜி தங்கவேல், கே.செல்வராசு, ரா.ஜெயபிரகாஷ் என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ. இளங்கோவன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் சே.சுகந்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) லீலாகுமார், தொழிலாளர் நல உதவி ஆணையர் திருமதி கே.பி.இந்தியா (சமூக பாதுகாப்பு திட்டம்), மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மா.பரமேஸ்வரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வெ.முருகன், முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முன்னாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்

# காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மார்ச் 6 -

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னைய்யா பேரனும்,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் மாயூரம். சி.காந்தி அவர்களின் மகனும் கடந்த அறுபது ஆண்டுகளாக திராவிட மு ன்னேற்றக் கழகத்தின் தீவிர செயல்பாட்டாளரும், மேனாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், ஆவின் நிறுவ னத்தின் ஓய்வு பெற்ற மேலாளர் (கணக்குகள்) கவிஞர், ‘வணக்கம் தமிழ்நாடு’ மின்னிதழ் முதன்மை செய்தியாளரும் ஆன முனைவர்.காந்தி கரு



ணாநிதி(வயது 69) உடல் நிலை குறைவால் மியாட் மருத்துவமனையில் நேற்று முன்தினம் (04.03.2025) இயற்கை எய்தினார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் நேற்று (05.03.2025 ) 1/732, கிருஷ்ணவேணி நகர், விரிவாக்கம் ll ,முகலிவாக்கம்,சென்னை600 125. என்ற முகவரியில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

தொடர்ந்து முகலி வாக்கம் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இச்செய்தியறிந்து கழக முன்னணியினர், ஆவின் ஊழியர்கள் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி

# வாக்காளர்களுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. நன்றி தெரிவித்தார்!

ஈரோடு, மார்ச் 6 -

ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற கே.இ.பிரகாஷ் ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட, மாநகர பகுதிகளில் விநாயகர் கோவில் வீதி 1, KAS நகர் கருங்கல்பாளையம், வளையக்கார வீதி, 1, 2 செட்டியார் கடை பெரியார் நகர், அசோகபுரி அம்மு மெஸ் கார்னர், மேட்டுக்கடை நால்ரோடு, நஞ்சனாபுரம், ராயபாளையம், நசியனூர் ரவுண்டாணா, தயிர்பாளையம், ஆலுச்சாம் பாளையம், பேரோடு மாரியம்மன் கோவில், பச்சப்பாளி மாரப்பம் பாளையம், காலிங்கராயன் பாளையம் பழைய கால்நடை மருத்துவமனை அருகில், லக்ஷ்மி நகர், சித்தோடு நால் ரோடு, ராய பாளையம், ஆர். என். புதூர் மறவா பாளையம், கொங்கம் பாளையம், கனிராவுத்தர் குளம், எஸ்.எஸ். பி. நகர் மாணிக்கம் பாளையம், சூளை, மாணிக்கம் பாளையம் ஹவுசிங் யூனிட் வில்லரசம்பட்டி, திண்டல் கவுண்டச்சி பாளையம் ஊராட்சி, சங்கு நகர் குமாரவலசு ஊராட்சி, டீச்சர்ஸ் காலனி குட்டபாளையம் ஊராட்சி, சூரம்பட்டி போலீஸ் ஸ்டேஷன், 2 நம்பர் பஸ் ஸ்டாப், பாரதிபுரம், சூரம்பட்டி, மாரியம்மன் கோவில், காசிபாளையம், சாஸ்த்ரி நகர், நாடார் மேடு, கொல்லாம் பாளையம்,

வெண்டி பாளையம் மூலபாளையம் சடையம் பாளையம் சேனாதி பாளையம் கவுண்டச்சி பாளையம் பஸ் ஸ்டாப், வெள்ளோடு மாரியம்மன் கோவில்,

வெள்ளோடு ரவுண டாணா, ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், பெருந்துறை ஆர். எஸ், பாரவலசு பிரிவு ஆகிய இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார்.

நிகழ்வில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர், மாநகர கழக செயலாளர் சுப்பிரமணியம், மாவட்ட கழக துணை செயலாளர்கள் செல்ல பொன்னி, க.சின்னையன், வழக்கறிஞர் அணி செயலாளர் மா.சு.ராதாகிருஷ்ணன், பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், பொ.ராமசந்திரன், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி, வி.செல்வராஜ், வில்லரசம்பட்டி முரு கேசன், குமாரவேலு , லட்சுமண குமார், ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு சதாசிவம், தலைமை கழக பேச்சாளர் ஈரோடு இளைய கோபால் , ஈரோடு ஒன்றியம் ரகுநாதன், ராஜா பாலசுப்ரமணியம், நசியனூர் மோகனசுந்தரி, சித்தோடு பேரூர் தனலட்சுமி, கண்ணகி தம்பண்ணன் , பார்த்திபன் IT wing , மண்டல தலைவர் காட்டு சுப்பு என்கிற சுப்ரமணியம், துணை மேயர் செல்வராசு, மதிமுக முசிறி ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் வனிதாமணி, ஜெகநாதன், ஜெகதீசன் , முன்னாள் பேரூர் செயலாளர் வைரம் பெரிய சாமி, வார்டு செயலாளர் ஜெயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அய்யா வைகுண்டர் போதித்த வழி நடந்து மனிதம் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மார்ச் 6 –

அய்யா வைகுண்டர் போதித்துச் சென்ற வழி நடந்து மனிதம் காப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அய்யா வைகுண்டர் அவர்களின் 193 ஆம் பிறந்தநாளை யொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஆதிக்க நெறிகளுக்கும் சாதியக் கொடுமைகளுக்கும் எதிராக வெகுண்டெழுந்து, சமத்துவத்துக்காகப் போராடிய அன்பின் திருவுரு அய்யா வைகுண்டர் அவர்களின் 193ஆம் பிறந்தநாள்!**

**“எளியாரைக் கண்டு இரங்கியிரு என் மகனே! வலியாரைக் கண்டு மகிழாதே என் மகனே!” என அவர் போதித்துச் சென்றவழி நடந்து மனிதம் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம் ராஜா ஏற்பாட்டில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ரத்த தானம் வழங்கினர். முகாமினை சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் கோ.தாமரைசெல்வன், தியாக.சுரேஷ்குமார், உள்ளூர் டி.கணேசன், சு.க.முத்து செல்வம், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.வெங்கடேஷ் உள்ளிட்ட பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் , முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பாக நகர கழக செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையிலும் கோட்டூர் ஒன்றிய கழக செயலாளர் பால.ஞானவேல் முன்னிலையிலும், தொடர்ந்துஅரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டு, ஆதரவற்ற இல்லத்தில் காலை உணவு வழங்குதல், அரசு போக்குவரத்துக் கழகம், தொ.மு.ச. சார்பாக கொடியேற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அரசு மருத்துவமனையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்குதல், பெரிய கோவிலில் மதிய உணவு வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகளுடன், தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க ”தமிழ்நாடு போராடும் ”தமிழ்நாடு வெல்லும் இதுதான் ஒரே இலக்கு என உறுதிமொழி ஏற்கப்பட்டது. நிகழ்வில் ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார மையங்களில் பிறந்த குழந்தைகளுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி தங்கமோதிரம் அணிவித்து குழந்தைகளுக்கான பாதுகாப்பு பெட்டகம் உள்ளிட்டவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகரக் கழக செயலாளர்கள் தா.கார்த்திகேயன், அ.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், எம்.தங்கவேல், ஏ.பி.ஆர்.சண்முகம், செல்வம், நாச்சிமுத்து,, இளங்கோவன், பேரூர் கழக செயலாளர்கள் திருமலை, கார்த்திக் ராஜ், ராமமூர்த்தி, நகர் மன்ற தலைவர்கள் திருச்செங்கோடு நளினி சுரேஷ்பாபு, குமாரபாளையம் டி.விஜய்கண்ணன், மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை ஒட்டி தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பி.தருமசெல்வன் ஆலோசனையின்படி சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ரஹீம் ஏற்பாட்டில் தர்மபுரி அழகாபுரியில் அமைந்துள்ள ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் துணை அமைப்பாளர்கள் ரிஸ்வான், பிலிப், சாதிக், முகம்மது மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.எல் காவேரி, நகர கழக துணை செயலாளர்கள் வ.முல்லைவேந்தன் எம்.அன்பழகன், மாவட்டப் பிரதிநிதி கனகராஜ், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட தலைவர் டி.ஏ.குமார், மாவட்ட நெசவாளர் அமைப்பாளர் எம்.ஏ காசிநாதன், நகர மன்ற உறுப்பினர் ஏ.மாதேஸ்வரன், ஐ.டி.விங் உதயசூரியன், ஐ.டி.விங் முன்னாள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.ஜெகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.